**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

**தூத்துக்குடி மாவட்டம்**

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஊரக வளர்ச்சி அலகில் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஈப்பு ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவு காவலர் பணியிடங்களை நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஈப்பு ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் , இரவு காவலர் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், ஈப்பு ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் , இரவு காவலர் காலிப்பணியிட விபரம், இன சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் **www.thoothukudi.nic.in** இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. இப்பணியிடத்திற்கான விண்ணப்பங்களை 07.03.2023 தேதி முதல், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் மேற்படி இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் 07.03.2023 தேதி முதல் 07.04.2023 தேதி வரை அலுவலக வேலை நேரத்தில் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
கோவில்பட்டி

# இணையதள அறிவிக்கை

ந.க.எண். அ4/ 1304 /2023 நாள் : 03.03.2023

**தூத்துக்குடி மாவட்டம்**
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.**
**அறிவிக்கை (Notification)**
**கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்**
ஒன்றிய தலைப்பு ஈப்பு ஓட்டுநர் , அலுவலக உதவியாளர் மற்றும் இரவு காவலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

**Kovilpatti Panchayat Union**
Direct Requirement for Union head Driver, Office Assistant and Night Watchman

தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய தலைப்பில் காலியாக உள்ள 1 (ஒன்று) ஈப்பு ஓட்டுநர் 2 (இரண்டு) அலுவலக உதவியாளர் மற்றும் 1 (ஒன்று) இரவு காவலர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிடங்களின் விபரம்**

| வ. எண். | பதவி | காலிப் பணியிடத்தின் எண்ணிக்கை | இனசுழற்சி |
|---|---|---|---|
| 1. | ஈப்பு ஓட்டுநர் | 01 | பொது போட்டி (General Turn) |
| 2. | அலுவலக உதவியாளர் | 02 | 1.பொது போட்டி (General Turn) |
| | | | 2. பட்டியலில் கண்ட சாதியினர் (முன்னுரிமை அடிப்படையின் பேரில் அருந்ததியர்கள் ஆதரவற்ற விதவை) |
| 3 | இரவு காவலர் | 01 | பொது போட்டி (General Turn) |

**கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள்**

1. **ஈப்பு ஓட்டுநர் -** 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மோட்டார் வாகன சட்டம் 1988 (மத்திய அரசு சட்டம் 59/1988)-ன் கீழான தகுதியுடைய அதிகாரியால் வழங்கப்பட்ட செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். ஐந்தாண்டுகளுக்கு குறைவில்லாமல் மோட்டார் வாகனங்களை ஓட்டியமைக்கான நடைமுறை அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும்.
2. **அலுவலக உதவியாளர் -** 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மிதிவண்டி ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.
3. **இரவு காவலர் -** எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

**வயது வரம்பு 01.07.2022 அன்று**

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | ஈப்பு ஓட்டுநர் | அலுவலக உதவியாளர் | இரவு காவலர் |
| 1. | பொதுப்பிரிவு (General Turn) | 18 | 32 | 32 | 32 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 18 | 32 | 34 | 34 |
| 3. | ஆதரவற்ற விதவை | 18 | 32 | 37 | 37 |
| 4. | ஆதிதிராவிடர் அருந்ததியர்/ஆதிதிராவிடர் / பழங்குடியினர் | 18 | 42 | 37 | 37 |

மேற்கண்ட அதிக வயது வரம்பு பூர்த்தியடைந்தவராக இருக்கக்கூடாது. முன்னுரிமை பிரிவினருக்கு அரசு விதிமுறைகளின்படி உச்ச வயது வரம்பில் தளர்வு உண்டு.

**விண்ணப்பங்கள் பெறப்படும் நாள்** கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வேலை நாட்களில் **07.03.2023 முதல் 07.04.2023 மாலை 5.45 மணி வரை.**

**ஊதியம்**

| வ. எண் | பணியின் விபரம் | ஊதியம் |
|---|---|---|
| 1. | ஈப்பு ஓட்டுநர் | ரூ.19500 - 62000/- |
| 2. | அலுவலக உதவியாளர் | ரூ.15700 - 50000/- |
| 3. | இரவு காவலர் | ரூ.15700 - 50000/- |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமைச்சான்று, மற்றும் இதர சான்றுகளின் ஆதாரம் இணைத்து அனுப்பவேண்டும்.
2. இனசுழற்சி வயது மற்றும் கல்வித்தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. அரசு விதிகளின்படி மேற்குறிப்பிட்ட இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.
4. ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.
5. விண்ணப்பதாரர் காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
6. சுய முகவரியுடன் கூடிய ரூ.25/-அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட அஞ்சல் உறை 1 (10*4 inches postal cover ) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
7. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் விபரம் தனியே அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.
8. நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்வதற்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.
9. விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என பரிசீலனையில் கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.

10. நியமனத்தை ரத்து செய்வதற்கான அனைத்து அதிகாரமும் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்கு உண்டு.
11. தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு அரசாணை எண்.303 நிதி (ஊதியக்குழு) துறை நாள்: 11.10.2017, அரசாணை எண்.305 நிதி (ஊதியக்குழு) துறை நாள்: 13.10.2017ன்படி ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :**

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 07.04.2023 பிற்பகல் 5.45 மணிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும் காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம் ,
கோவில்பட்டி - 628501
தூத்துக்குடி மாவட்டம்
(தொலைபேசி எண். 04632 - 220308)

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call letter) பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

ஈப்பு ஓட்டுநர் அலுவலக உதவியாளர் மற்றும் இரவு காவலர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பப் படிவம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் மற்றும் தூத்துக்குடி மாவட்ட இணையதளம் www.thoothukudi.nic.in ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளது.

3/3/23

**ஆணையாளர்,**
**ஊராட்சி ஒன்றியம்,**
**கோவில்பட்டி**

# தூத்துக்குடி மாவட்டம்
# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

ஒன்றியத் தலைப்பு ஈப்பு ஓட்டுநர் / அலுவலக உதவியாளர் / இரவுக் காவலர் பணிக்கான விண்ணப்பம்

**விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 07.04.2023**

புகைப்படம் கையொப்பத் துடன்

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் பணியின் பெயர் | |
| வட்டாரம் | |
| விண்ணப்பிக்கும் இன சுழற்சி | |

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பதாரர் பெயர் | |
| 2 | தந்தை / கணவர் / பாதுகாவலர் பெயர் | |
| 3. | பாலினம்<br>ஆண் / பெண் / திருநங்கை | |
| 4. | நிலையான முகவரி<br>அஞ்சல் குறியீட்டுடன் | |
| 5. | விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் ஊராட்சி ஒன்றித்தை சேர்ந்தவரா | ஆம் / இல்லை |
| 6. | இல்லையெனில் விண்ணப்பதாரர் குடியிருந்து வரும் ஊராட்சி ஒன்றியம் | |
| 7. | விண்ணப்பதாரரின் கைப்பேசி எண் / மின்னஞ்சல் முகவரி | |
| 8. | பிறந்த தேதி (பூர்த்தியடைந்த வயதுடன்)<br>(01.07.2022 தேதியின்படி) | ஞஞ / ஆஆ / லுலுலுலு / வயது : |
| 9. | கல்வித் தகுதி | |
| 10. | இனம் (பொருத்தமானவற்றை ✓ செய்யவும்) | |
| 11. | வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட விபரம் இருப்பின் | பதிவு எண் :<br>பதிவு நாள் :<br>புதுப்பிக்க வேண்டிய நாள் : |
| 12. | மனுதாரரின் பிற தகுதிகள் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | |
| 13. | அரசுப்பணியில் சேர முன்னுரிமை பெற்றவரா | ஆம் / இல்லை |

Item 10 options:

| OC | BC | BC (Muslim) | MBC | SC | SC (A) | ST | Others |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

| | | |
|---|---|---|
| | ஆம் எனில் எந்த வகையான முன்னுரிமை கொரோனா தொற்று மற்றும் இதர வழிகளில் பெற்றோர் இருவரையும் இழந்தவரா? / தமிழக அரசுப்பள்ளியில் தமிழ் மொழியில் பயின்ற நபர்கள்/ முன்னாள் இராணுவத்தினர் / ஆதரவற்ற விதவை / மாற்றுத்திறனாளி (அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்) / கலப்பு திருமணம் செய்தவர் இதர முன்னுரிமை உள்ளவர் முன்னுரிமை தவறாது குறிப்பிட வேண்டும்.<br>(ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 14. | திருமண நிலை<br>(பொருத்தமானவற்றை ☑ செய்யவும்)<br>(வ.எண் 2,3,4 ஆம் எனில் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | 1. திருமணமாணவர் — ஆம் / இல்லை<br>2. விதவை — ஆம் / இல்லை<br>3. ஆதரவற்ற விதவை — ஆம் / இல்லை<br>4. கணவரால் கைவிடப்பட்டவர் — ஆம் / இல்லை |
| 15. | பிற குறிப்புகள் | |

| | | | |
|---|---|---|---|
| 16. | **கீழ்க்கண்ட சான்று நகல்களை இணைத்துள்ளேன்** (பொருத்தமானவற்றை ✓ செய்யவும்) | | |
| அ) | பள்ளி மாற்றுச் சான்றிதழ் | ஆம் | இல்லை |
| ஆ) | கல்வித்தகுதி சான்று | ஆம் | இல்லை |
| இ) | இருப்பிடச்சான்றிதழ்<br>(ஆதார் அடையாள அட்டை / வாக்காளர் அடையாள அட்டை / குடும்ப அட்டை /வீட்டு வரி ரசீது (ஏதாவது ஒன்று) | ஆம் | இல்லை |
| ஈ) | முன்னுரிமைச் சான்று (பொருந்தும் நேர்வில்) | ஆம் | இல்லை |
| உ) | ஓட்டுநர் உரிமம் (பொருந்தும் நேர்வில்) | ஆம் | இல்லை |
| ஊ) | ஓட்டுநர் முன் அனுபவச்சான்று | ஆம் | இல்லை |
| எ) | சாதி சான்றிதழ் | ஆம் | இல்லை |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையென சான்று செய்கிறேன். இதில் தவறான தகவல்கள் இருப்பது கண்டறியப்பட்டாலோ அல்லது புகார்கள் மூலம் தெரிய வரப்பெற்றாலோ அரசால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு சம்மதிக்கிறேன். நேர்முகத் தேர்வின்போது அனைத்து அசல் சான்றிதழ்களையும் சமர்ப்பிக்கிறேன் எனவும் உறுதி கூறுகிறேன்.

இடம் :

நாள் :

மனுதாரர் கையொப்பம்